## கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : மரு. வி. ஜெயசந்திர பானுரெட்டி., இ.ஆ.ப.,

ந.க.எண்:16847/2018/கே2, நாள்: 21 .03.2022.

பொருள் : பணியமைப்பு - கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - கிருஷ்ணகிரி மாவட்டம் - ஊர்நல அலுவலர் (நிலை-2) - அம்புஜம் (திருமதி) என் - 04.03.2019 முற்பகல் ஊர்நல அலுவலர் (நிலை-2) நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :
1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண்.16847/2018/கே2, நாள்:02.03.2019.
2. அரசாணை (நிலை) எண.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்:26.02.2020.
3. அரசு இணைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ3)துறை, சென்னை கடித எண்.6895/இ3/2021-5, நாள்:14.12.2021.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.18355/2021/டி2, நாள்:18.12.2021.
5. தொடர்புடைய ஆவணங்கள்

----000----

**ஆணை :-**

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தொட்டமெட்டரை ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து கடந்த 03.07.2018 அன்று பணியிடைக்காலமான (லேட்) ராம்பாபு என்பவரின் மனைவி **திருமதி.என்.அம்புஜம்** என்பவருக்கு பார்வை (1)-இன்படி கருணை அடிப்படையில் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலராக (நிலை-2) பணியிடம் வழங்கப்பட்டு **04.03.2019 முற்பகல்** பணியில் சேர்ந்து, தற்போது கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (2)-இல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை விதித்தளர்வு தேவையில்லாத இனங்களுக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) **(Appointing Authority)** என்ற நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலரான மாவட்ட ஆட்சித்தலைவர் நிலையில் **(One level higher than the appointing authority)** பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, **திருமதி.என்.அம்புஜம், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை ஊர்நல அலுவலராக (நிலை-2) நிலையில் பணியில் சேர்ந்த நாளான 04.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை** செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

(...2..)

மேற்படி விவரம் தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கிருஷ்ணகிரி.

பெறுநர்

**திருமதி. என். அம்புஜம்,**
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
கெலமங்கலம்.
**(வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/(கிஊ), கெலமங்கலம் மூலமாக)**

<u>நகல் :</u> கே2 இருப்பு கோப்பிற்கு

ஊராட்சி ஒன்றியம்,
கெலமங்கலம்,

ஒ.மு.ந.க.எண். 913/2022/அ, நாள்: 30.03.2022

சார்வு செய்யப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) 30/3/22
கெலமங்கலம்

<u>பெறுநர்:</u>

திருமதி. என். அம்புஜம்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
கெலமங்கலம்..

30.3.22